நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி

**முன்னிலை : திரு. K. ஆனந்த், பி.ஏ., எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2026 வது வருடம் ஜீலை திங்கள் 21–ம் நாள் செவ்வாய்க்கிழமை

ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் : 201 / 2021

CNR.No.TNTT07-004110-2021

| **வ. எண்** | | **விபரங்கள்** |
|---|---|---|
| 1 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | நாலாட்டின்புதூர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.388/2020 |
| 2 | புகார்தாரர் | தமிழ்நாடு அரசுக்காக, காவல் ஆய்வாளர் |
| | எதிரியின் விபரங்கள் | |
| 3 | பெயர் | பன்னீர்செல்வம் |
| 4 | தந்தை பெயர்/ கணவர் பெயர் | மாரி |
| 5 | வேலை | – |
| 6 | முகவரி | மேற்கு தெரு, கூரைக்கூண்டு, சூலக்கரை, விருதுநகர். |
| 7 | வயது | 38/2020 |
| | தேதி | |
| 8 | சம்பவம் | 10.09.2020 |
| 9 | புகார் | 02.02.2021 |
| 10 | எதிரியின் கைது விபரம் | எதிரி கடந்த 16.09.2020 அன்று கைது செய்யப்பட்டுள்ளார். |
| 11 | பிணை விபரம் | எதிரி 16.09.2020 அன்று காவல் நிலைய |

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.21 18:24:32 +0530

| | | |
|---|---|---|
| | | பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். |
| 12 | வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 09.09.2021 |
| 13 | வழக்கு விசாரணை முடிவுற்ற தேதி | 20.07.2026 |
| 14 | தீர்ப்புரை | சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இதச பிரிவுகள் 279, 337, 304-A படியான இவ்வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை விடுதலை செய்து குற்றவியல் விசாரனை நடைமுறைச்சட்டம் பிரிவு 255(1) கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம் | - |
| 16 | காலதாமதத்திற்கான விளக்கம் | எதிரி மற்றும் சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்வதினால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. |

இந்த வழக்கு 10.05.2021 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 (பொறுப்பு), கோவில்பட்டி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. கருப்பசாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், 16.07.2026 அன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்த போது இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**எதிரி மீது நாலாட்டின்புதூர் காவல் நிலைய ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :**

1) 10.09.2020 ஆம் தேதி காலையில் சாட்சி 1 கமலம் கரிசல்குளத்தில் இருந்து கோவில்பட்டி S. S. நகரில் உள்ள அவரது மகன் தனசேகரனை பார்க்க சென்று தனசேகரனை பார்த்து விட்டு திரும்ப கரிசல்குளத்திற்கு செல்வதற்காக, தனசேகரனுக்கு சொந்தமான TN 69 AQ 9182 TVS Scooty Zest வண்டியில் தனசேகரன்

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:24:38 +0530

மேற்படி வண்டியை ஓட்டிக் கொண்டும், சாட்சி 1 வண்டியின் பின்னால் உட்கார்ந்து கொண்டும் மதுரை – திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையில் சத்திரப்பட்டி சரவணா பெட்ரோல் பல்க் அருகில் 12.15 மணியளவில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி ரோட்டின் இடதுபுறம் சென்று கொண்டிருந்த போது, அவர்களுக்கு பின்னால் அதே ரோட்டில் அதே திசையில் TN 67 BH 7455 அசோக் லைலாண்ட் தோஸ்த் வண்டியை ஓட்டி வந்த எதிரி, அவர் ஓட்டி வந்த வண்டியை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, தனசேகரன் ஓட்டி சென்று கொண்டிருந்த வண்டியை முந்திச் செல்லும் போது, இடதுபுறமாக தனசேகரன் ஓட்டி வந்த வண்டியில் உரசி விபத்து ஏற்படுத்தி, சாட்சி 1க்கு இடது கன்னத்திலும், இடது கையிலும், இடது கால் முட்டியிலும் சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், தனசேகரனுக்கு இடது பக்க தலையில் பலத்த ரத்தக் காயமும், தலையின் பின்புறம் வீக்கக் காயமும், வலது கால் முட்டியில் சிராய்ப்புக் காயமும், வலது கை மணிக்கட்டில் சிராய்ப்புக் காயமுடும், இடது பக்க இடுப்பின் கீழ் சிராய்ப்புக் காயமும், இடது கால் முட்டியில் சிராய்ப்புக் காயமும் ஏற்பட்டு தனசேகரனுக்கு இறப்பை ஏற்படுத்தியதாக நாலாட்டின்புதூர் காவல் ஆய்வாளர் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 337, 304(A) கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207ன் படி கடந்த 16.08.2021 அன்று இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்னர் வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில், எதிரி மீது இதச பிரிவுகள் 279, 337, 304–A படியான குற்றச்சாட்டுகளுக்கு முதல் நிலை வழக்கும் போதுமான ஆதாரங்களும் இருந்ததால் எதிரி மீது மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட போது, எதிரி தன் மீதான குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

3) எதிரி தன் மீதான குற்றச்சாட்டை மறுத்துவிட்ட படியால் மேற்படி பிரிவுகளின் கீழ் அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.21 18:24:43 +0530

வரையான சான்றாவணங்களும் குறியிடப்பட்டன. இத்துடன் அரசு தரப்பில் சாட்சிகள் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது. பட்டியல் சாட்சி 8 நாகூர்கனி மற்றும் பட்டியல் சாட்சி 9 கோகிலட்சுமி ஆகியோர் இறந்து விட்டதாக அவர்களது இறப்பு சான்றிதழ் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

4) கடந்த 10.09.2020 ஆம் தேதி காலை 06.30 மணியளவில் விபத்தில் இறந்த அசா.1 கமலம் என்பவரின் மகன் தனசேகரனும், அசா.1 ம் TN 69 9182 என்ற Scooty இருசக்கர வாகனத்தில் கோவில்பட்டியில் இருந்து கரிசல்குளம் செல்வதற்காக மதுரை – திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையில் மதியம் சுமார் 12.15 மணியளவில் சத்திரப்பட்டி சரவணா பெட்ரோல் பல்க் அருகே உள்ள சுப்புராஜ் பெட்டி கடை அருகே வடக்கில் இருந்து தெற்கு நோக்கி இடது புறமாக சென்று கொண்டிருந்த போது TN 67 7455 என்ற குட்டியானை வாகனம் பின்னால் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், இன்டிகேட்டர் ஏதும் போடாமலும் வந்து அசா.1 ம், அவரது மகனும் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது உரசி விபத்து ஏற்படுத்தியதில் அசா.1 க்கு இடது பக்க கன்னத்திலும், முட்டியிலும் காயம் ஏற்பட்டது. அசா.1 ன் மகனுக்கு தலையில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டு சுயநினைவின்றி கிடந்துள்ளார்.

5) பின்பு அசா.5 செந்தில்குமார் மற்றும் அசா.7 கண்ணன் ஆகியோர்கள் காயம்பட்ட அசா.1 மற்றும் அவரது மகனை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அனுப்பி வைத்துள்ளார்கள். பின்னர் சிகிச்சை பலனின்றி அசா.1 ன் மகன் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் 11.09.2020 அன்று இறந்துள்ளார். பின்பு அசா.1 சிகிச்சையில் இருந்த போது, அசா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்து கொடுத்ததை முதல் நிலைக் காவலர் அசா.6 ஜான் என்பவர் பெற்றுக் கொண்டு, 10.09.2020 ஆம் தேதி, நிலைய குற்ற எண்.388/2020, இதச பிரிவுகள் 279, 337 ஆக அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கையை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அசா.9 உதவி ஆய்வாளர் சிலுவை அந்தோணி,

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:24:48 +0530

10.09.2021 ஆம் தேதி சம்பவ இடமான மதுரை – திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சத்திரப்பட்டி, சரவணா பெட்ரோல் பல்க் எதிரில் உள் சுப்புராஜ் டீ கடைக்கு அருகில் சென்று டார்ச் லைட் மற்றும் வாகன விளக்குகளின் உதவியுடன் சம்பவ இடத்தை பார்வையிட்டு அசா.8 செல்லப்பாண்டி மற்றும் அசா.4 அமல்ராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் அசா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அசா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

6) பின்பு சம்பவ சாட்சிகளான கமலம், செந்தில், கண்ணன், முருகலட்சுமி, செல்லப்பண்டி, அமல்ராஜ் மற்றும் வழக்கு பதிவு செய்த காவலர் ஜான் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு 11.09.2020 ஆம் தேதி வழக்கில் காயம்பட்ட தனசேகரன் என்பவர் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து வந்தவர் 06.20 மணிக்கு சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டதாக கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் வழக்கின் சட்டப் பிரிவுகளை 279, 337 இதசவிலிருந்து 279, 337, 304–ஏ இதசவாக மாற்றம் செய்து அசா.ஆ.7 சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். பின்பு 11.09.2020 ஆம் தேதி மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அசா.10 ஆய்வாளர் சுகாதேவி, சம்பவ இடம் சென்று சாட்சிகள் செந்தில்கண்ணன் மற்றும் செல்லபாண்டி ஆகியோர்களை விசாரித்ததில் முதல் விசாரணை அதிகாரியிடம் கூறியது போல் அவரிடம் சொன்னதால் ஆய்வாளர் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

7) பின்பு 11.09.2020 ஆம் தேதி 11.30 மணிக்கு இவ்வழக்கில் இறந்து போன தனசேகரின் பிரேதத்தின் மீது திருநெல்வேலி அரசு கல்லூரி மருத்துவமனயில் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் 11.45 மணி முதல் 13.30 மணி வரை பிரேத விசாரணை முடித்து அசா.ஆ.8 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்ததுள்ளார். பின்பு இறப்பின் காரணம் அறியும் பொருட்டு காவலர் ஜான் என்பவர் மூலம் பிரேத பரிசோதனை செய்வதற்காக கடிதம் கொடுத்து நியமித்து பிரேத பரிசோதனைக்கு பிரேதத்தை உட்படுத்தியுள்ளார். பின்பு சாட்சிகள் கமலா, முருகலட்சுமி, கிஷோர்குமார் மற்றும் முதல் நிலைக் காவலர் ஜான் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு 16.09.2020 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நிலையம் ஆஜரான

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:24:54 +0530

எதிரியை கைது செய்து நிலைய பிணையத்தில் விடுவித்துள்ளார். பின்பு விபத்துக்குள்ளான TN 67 BH 7455 என்ற Ashok leyland load auto என்ற வாகனத்தையும், 01.10.2020 அன்று TN 69 AQ 9182 என்ற TVS Scooty என்ற இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. நாகூர்கனி என்பவரை 02.02.2021 அன்று விசாரித்து முறையே அசா.ஆ.11, அசா.ஆ.12 மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றுள்ளார்.

8) பின்பு 19.12.2020 ஆம் தேதி அசா.ஆ.10 பிரேத பரிசோதனை அறிக்கை சான்று வழங்கிய மருத்துவர் திரு. ஹன்னா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு 25.01.2021 ஆம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு அசா.ஆ.10 காயச்சான்று வழங்கிய மருத்துவர் திருமதி. கோகிலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அசா.1 ன் காயத்தகவல் அசா.ஆ.13 ஆகும். இறந்து போன தனசேகரின் காயத்தகவல் அசா.ஆ.14 ஆகும். பின்பு சாட்சிய விசாரணை முடித்து எதிரி மீது கடந்த 02.02.2021 அன்று குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

9) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை தொகுத்து 09.07.2026 அன்று கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி தான் குற்றவாளி அல்ல என்று மறுத்துக் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:24:59 +0530

**பிரச்சினையும், தீர்வும் :**

10) அரசுத் தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் வழியாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டிருப்பதால் மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்று வாதுரை எடுத்துரைத்தார்.

11) எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிரி மீது அரசுத் தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எதிரிக்கு எதிராக நடுநிலையான சாட்சிகள் சாட்சியமளிக்கவில்லை என்றும், அசா.2, அசா.3 ஆகியோர் கேள்விப்பட்ட சாட்சிகள் என்றும், அரசுத் தரப்பு சாட்சிகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று எதிர்வாதம் எடுத்துரைத்தார்.

12) எதிரி அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் அசோக் லைலாண்ட் தோஸ்த் வண்டியை ஓட்டிச் சென்று அசா.1 மற்றும் அவரது மகன் தனசேகரன் என்பவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி தனசேகரனுக்கு இறப்பையும், அசா.1க்கு சாதாரண காயத்தையும் ஏற்படுத்திய குற்றம் புரிந்துள்ளார் என்பது அரசுத் தரப்பு வழக்காகும்.

13) அசா.1 சம்பவம் மற்றும் காயம்பட்ட சாட்சியாகும். அசா.2 மற்றும் அசா.3 ஆகியோர் சம்பவத்தை கேள்விப்பட்ட மற்றும் பிரேத விசாரணை சாட்சியாகும். அசா.4 மற்றும் அசா.8 ஆகியோர் பார்வை மகஜர் சாட்சியாகும். அசா.5 மற்றும் அசா.7 ஆகியோர்கள் கண்ணுற்ற சாட்சியாகும். அசா.6 தனது சாட்சியத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:25:05 +0530

செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார். அசா.9, அசா.10 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் புலன்விசாரணை செய்து, இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார்கள்.

14) அரசுத் தரப்பு வழக்கானது இறந்து போன தனசேகரன் மதுரை – திருநெல்வேலி நெடுஞ்சாலையில் சத்திரப்பட்டி சரவணா பெட்ரோல் பல்க் அருகே வடக்கில் இருந்து தெற்கு நோக்கி இடது புறமாக சென்று கொண்டிருந்த போது, மேற்படி ரோட்டில் பின்னால் TN 67 7455 என்ற பதிவெண் கொண்ட இலகுரக சரக்கு வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து இறந்து போன தனசேகரன் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி தனசேகருக்கு இறப்பையும், அசா.1 க்கு சாதாரண காயத்தையும் ஏற்படுத்தியுள்ளார் என்பதாகும். அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அசா.ஆ.6 மாதிரி வரைபடத்தை பரிசீலனை செய்ததில், விபத்தானது மதுரை – திருநெல்வேலி மெயின் சாலையின் இடது ஓரத்தில் நடந்துள்ளது என்பது தெரிய வருகிறது.

15) அசா.1 ன் மகன், அசா.2 ன் கணவர் மற்றும் அசா.3 ன் தந்தை தான் இறந்து போன தனசேகரன் என்பதால் அவர்கள் ஒருதலைபட்ச சாட்சியாக இருக்க வாய்ப்புண்டு. சம்பவம் மற்றும் காயம்பட்ட சாட்சியான அசா.1 தனது முதல் விசாரணையில் எதிரியை பார்க்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார். கண்ணுற்ற சாட்சியான அசா.5 தனது முதல் விசாரணையில் எதிரியை சரியாக நினைவில் இல்லை என்றும், பல்க்கில் இருந்து வெளியே வந்த போது தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்த Scooty இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த இரண்டு நபர்கள் கீழே விழுந்து காயம்பட்டிருந்ததாக சாட்சியமளித்துள்ளதன் மூலம் அசா.5 சம்பவத்தை நேரடியாக பார்த்திருக்க வாய்ப்பில்லை என்பது வெளிப்படுகிறது.

16) இந்த வழக்கு சம்பவம் 10.09.2020 அன்று நடந்ததாக அரசு தரப்பு வழக்கு உள்ள நிலையில் மேற்படி வாகனங்கள் 16.09.2020 மற்றும் 01.10.2020 ஆகிய தேதிகளில் மோட்டார் வாகன ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அசா.1 மற்றும் அசா.5 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் எதிரியின் அடையாளத்தை

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.21 18:25:12 +0530

உறுதிப்படுத்தவில்லை என்பதால் அவர்களது சாட்சியத்தை எதிரிக்கு எதிராக பயன்படுத்த முடியாது. அசா.1 தனது குறுக்கு விசாரணையில் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது மருத்துவர்களிடம் குட்டியானை வண்டி இடித்ததாக சொன்னதாகவும், சத்திரப்பட்டி விலக்கில் வைத்து சம்பவம் நடந்ததாக தான் மருத்துவரிடம் சொன்னதாகவும், பொதுவாக இடது பக்கமாக சென்று கொண்டிருக்கும் போது வலது பக்கமாக மோதும் போது அந்த வாகனத்தின் வலது பக்கம் சேதம் ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் குட்டியானை வண்டியின் கதவு திறந்து தான் விபத்து ஏற்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

17) அசா.5 தனது குறுக்கு விசாரணையில் சம்பவத்தன்று பெட்ரோல் பல்கிற்கு உள்ளே தான் வேலை பாாத்துக் கொண்டிருந்ததாகவும், மேற்படி பெட்ரோல் பல்க்கின் வடக்கு பக்கம் கடைகள் மற்றும் 6 அடி உயரத்தில் தடுப்பு சுவர் உள்ளது என்றும், மேற்படி பல்க்கிற்குள் இருக்கும் போது வடக்கு பக்காக உள்ள நெடுஞ்சாலையை பார்க்க முடியாது என்றும், தான் சத்தம் கேட்ட பின்பு தான் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், சம்பவ இடத்திற்கு போகும் போது விபத்து ஏற்படுத்திய வாகனமும், அதன் ஓட்டுநரும் சம்பவ இடத்தில் இல்லை என்றும், போலீசார் விசாரணையில் சம்பவம் பெட்ரோல் பல்க்கின் வடக்கு பக்கம் நடந்ததாக சொன்னதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

18) அசா.7 தனது குறுக்கு விசாரணையில் தான் வேலை பார்த்த பல்க் கிழக்கு பக்கம் இருந்ததாகவும், அங்கு வேலை பார்த்துக் கொண்டிருந்ததாகவும், பல்க்கை ஒட்டியவாறு இடது பக்கம் விபத்து நடந்ததாகவும், சத்தம் கேட்ட பிறகு தான் வந்து பார்த்ததாகவும், தான் வந்து பார்க்கும் போது லாரி தட்டிவிட்டு சென்றுவிட்டது என்றும், இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களும் விபத்து நடந்த பின்னர் மயங்கிவிட்டதாகவும், ஆம்புலன்சிற்கு பக்கத்தில் உள்ளவர்கள் தகவல் சொன்னதாகவும், விபத்து நடந்த உடன் Highway Patrol போலீசார் மற்றும் நாலாட்டின்புதூர் காவல் நிலைய போலீசார் வந்து ஆம்புலன்சில் ஏற்றிவிட்டதாகவும், தான் வேலைக்கு போய்விட்டதாகவும், லாரி ஓட்டுநரை விபத்துக்கு முன்னால் பார்த்தது இல்லை என்றும், அவரது பெயர் விவரங்கள் இரண்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்டதால் தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.21 18:25:17 +0530

19) அசா.4, அசா.8 ஆகியோர் தங்களது முதல் விசாரணையில் பார்வை மகஜர் குறித்து சாட்சியமளித்துள்ளார்கள். அசா.8 தனது குறுக்கு விசாரணையில் தான் கையொப்பம் செய்த பேப்பரில் படம் வரைந்து இருந்ததாகவும், அதற்கு சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளதால் அசா.8 ன் சாட்சியத்தை தகுதியானதாக கருத முடியாது. அசா.9 தனது குறுக்கு விசாரணையில் கமலம் என்பவரின் காயச்சான்றில் ஆட்டோ மோதி விபத்து ஏற்பட்டதாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றும், அசா.1 தனது புகார் மனுவிலும், உங்கள் விசாரணையிலும் இறந்த நபருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததாக சொல்லவில்லை என்றும், சரவணா பெட்ரோல் பல்க்கிற்கு வலது புறமாக 6 அடி உயரம் உள்ள மதில் சுவர் உள்ளது என்றும், பொதுவாக பெட்ரோல் பல்க்கின் உள்ளே இருந்து பணி புரிபவர்களுக்கு வடக்கில் இருந்து வரும் வாகனங்கள் தெரியாது என்றும், வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வரும் வாகனங்கள் மற்ற வாகனங்களை முந்துவதாக இருந்தால் வலது புறமாக தான் முந்த வேண்டும் என்றும், அவ்வாறு வலது புறம் முந்துவதாக இருந்தால் இடது பக்கம் போக வேண்டிய அவசியம் இல்லை என்றும், அசா.1 ன் புகார் மற்றும் தனது விசாரணையில் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் கதவுகள் திறந்ததால் தான் விபத்து ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

20) இவ்வழக்கில் காயம்பட்ட நபரான அசா.1, எதிரியை தான் பார்க்கவில்லை என்று தனது முதல் விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார். இவ்வழக்கில் நான்கு சக்கர சிறிய ரக சரக்கு வாகனத்தை எதிரி ஓட்டியதாக அரசு தரப்பு வழக்கு உள்ள நிலையில், குட்டி யானை வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக அசா.1 சாட்சியம் அளித்துள்ளது முரண்பாடாக உள்ளது. பார்வை மகஜரில் வழக்கு சம்பவம் சத்திரப்பட்டி சரவணா பெட்ரோல் பங்க் சுப்புராஜ் டீக்கடை அருகே ரோட்டில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், சம்பவம் சத்திரப்பட்டி விலக்கில் வைத்து நடந்ததாக மருத்துவரிடம் கூறியதாக அசா.1 தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளது முரண்பாடாக உள்ளது. அசா.1 தனது முதல் விசாரணையில் மேற்படி சரக்கு வாகனம் மேற்படி இருசக்கர வாகனத்தின் மீது உரசி விபத்து ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், அசா.1 தனது குறுக்கு விசாரணையில் மேற்படி

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.21 18:25:23 +0530

சரக்கு வாகனத்தின் கதவு திறந்து தான் விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளது முரண்பாடாக உள்ளது. அசா.1 விபத்து ஏற்பட்ட விதம் குறித்து முரண்பாடாக சாட்சியம் அளித்துள்ளார்.

21) அசா.2 மற்றும் அசா.3 ஆகியோர்கள் தங்களது குறுக்கு விசாரணையில் விபத்து குறித்து தங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று ஒப்புக் கொண்டுள்ளார்கள். பார்வை மகஜர் சாட்சியான அசா.4 தனது குறுக்கு விசாரணையில் இறந்து போன நபர் மற்றும் அசா.1 தனது ஊரைச் சார்ந்தவர்கள் என்றும், தான் வழக்கு சம்பந்தமாக அசா.1 உடன் காவல் நிலையத்திற்கு சென்றதாகவும், சத்திரப்பட்டி விலக்கில் வைத்து சம்பவம் நடந்ததாக போலீசார் தன்னிடம் கையொப்பம் வாங்கியதாகவும், சத்திரப்பட்டி விலக்கிற்கும், மேற்படி பாலத்திற்கும் இடையே சுமார் 500 மீட்டர் தொலைவு இருக்கும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அசா.5 தனது முதல் விசாரணையில் எதிரி மேற்படி சரக்கு வாகனத்தை இயக்கி மேற்படி இரு சக்கர வாகனத்தின் மீது அதிவேகமாக மோதி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. அசா.5 தனது குறுக்கு விசாரணையில் தான் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு சென்ற போது விபத்து ஏற்படுத்திய வாகனம், அதன் ஓட்டுநர் சம்பவ இடத்தில் இல்லை என்று சாட்சியமளித்துள்ளதன் மூலம் அசா.5 விபத்தை நேரடியாக பார்த்திருக்க வாய்ப்பில்லை என்பது தெளிவாகிறது.

22) அசா.6 தனது குறுக்கு விசாரணையில் புகார் வாக்குமூலத்தில் பெட்ரோல் பங்கின் எதிரில் வைத்து விபத்து நடந்ததாக அசா.1 புகார் மனுவில் சொல்லி உள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அசா.6 தனது குறுக்கு விசாரணையில் 12.15 மணிக்கு நடைபெற்ற சம்பவத்திற்கு மாலை 06.15 மணிக்கு தான் வழக்கு பதிவு செய்யப்பட்டதாக ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் அசா.1 தனது முதல் விசாரணையில் குட்டி யானை வாகனம் விபத்து ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், அரசு தரப்பு வழக்குப்படி சிறிய நான்கு சக்கர சரக்கு வாகனம் விபத்து ஏற்படுத்தியதாக உள்ள நிலையில், அசா.7 தனது முதல் விசாரணையில் லாரி வேகமாக வந்து விபத்து ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளது முரண்பாடாக உள்ளது. குட்டி யானை வாகனமும், நான்கு சக்கர இலகு ரக சரக்கு வாகனமும், லாரியும் வெவ்வேறான

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.21 18:25:29 +0530

வாகனமாகும். அசா.7 அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பாடாக விபத்து ஏற்படுத்திய வாகனம் லாரி என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அசா.1 தனது முதல் விசாரணையில் விபத்து ஏற்படுத்திய வாகனம் மேற்படி இருசக்கர வாகனத்தின் மீது உரசி விபத்து ஏற்படுத்தியதாக சாட்சியமளித்துவிட்டு, பின்பு அசா.1 தனது குறுக்கு விசாரணையில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் கதவு திறந்து விபத்து ஏற்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ள நிலையில், அசா.7 தனது முதல் விசாரணையில் விபத்து ஏற்படுத்திய வாகனம் பின்னால் வந்து தட்டி விட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். விபத்து நடந்து விவரம் குறித்து அசா.1 மற்றும் அசா.7 ன் சாட்சியத்திற்கிடையே முரண்பாடுகள் காணப்படுகிறது. மேலும் தான் சத்தம் கேட்ட பிறகு தான் வந்து பார்த்ததாக அசா.7 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் அசா.7 தனது குறுக்கு விசாரணையில் தான் வந்து பார்த்த போது லாரி தட்டி விட்டு சென்று விட்டதாக ஒப்புக் கொண்டுள்ளார். அசா.7 தனது குறுக்கு விசாரணையில் இரண்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்டதால் எதிரியின் பெயர் விவரங்கள் தனக்கு தெரியாது என்று சாட்சியமளித்துள்ளதன் மூலம் எதிரியின் அடையாளத்தை அசா.7 முறையாக உறுதிப்படுத்தவில்லை என்பது வெளிப்படுகிறது.

23) அசா.5 மற்றும் அசா.7 ஆகியோர் சரவணா பெட்ரோல் பங்க்கில் பணி செய்வதற்கான எந்த ஆவணமும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி சரக்கு வாகனத்தில் சேதாரமோ, சிராய்ப்போ இல்லை என்று மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அசா.10 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார். மேற்படி இரண்டு வாகனங்களும் ஒரே நேரத்தில் ஆய்வுக்கு அனுப்பப்படாமல் ஒரு மாத கால இடைவெளியில் ஆய்வுக்கு அனுப்பப்பட்டதற்கு சிறப்பு காரணம் கிடையாது என்றும் அசா.10 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார். அசா.1 தனது புகார் வாக்குமூலத்தில் எதிரி மேற்படி வாகனத்தை ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தை முந்திச் செல்லும் போது இருசக்கர வாகனத்தில் உரசி விபத்து ஏற்படுத்தியதாக சொல்லியுள்ள நிலையில், எதிரி ஓட்டிய வாகனத்தின் கதவு திறந்து விபத்து ஏற்பட்டதாக அசா.1 தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளது முரண்பாடாக உள்ளது. புகார் வாக்குமூலத்தில் எதிரி ஓட்டிய வாகன

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:25:35 +0530

உரசி விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதன் மூலம் எதிரி அதிவேகமாக வாகனம் இயக்கி இருக்க வாய்ப்பில்லை என்பது வெளிப்படுகிறது. அசா.1, அசா.5 மற்றும் அசா.7 ஆகியோர்கள் தங்கள் முதல் விசாரணையில் எதிரி இடது ஓரமாக முந்தி சென்ற போது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

24) பொதுவாக விபத்து வழக்குகளில் நஷ்ட ஈடு பெறுவதற்கு வேண்டி காயம்படாத பெரிய வாகனத்தின் ஓட்டுநர் மீது விபத்து வழக்கு பதிவு செய்யப்படுவது வழக்கமாக உள்ளது. மேலும், இலகுரக சரக்கு வாகனத்தை ஓட்டிய நபர் வேகமாக இயக்கியதாக அசா.5 குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. மேலும் எதிரி தான் மேற்படி இலகு ரக சரக்கு வாகனத்தை இயக்கியதாக அசா.1, அசா.5 ஆகியோர் குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. மேற்படி இரண்டு வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளிலும் இயந்திர கோளாறினால் விபத்து ஏற்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இலகு ரக சரக்கு வாகனத்தில் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் எந்தவித சேதாரம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் முன் இடது பக்க பின்புற கண்ணாடி உடைந்தும், முன் இடது பக்க ஹெட்லைட் கவர் சேதமாகியும், இடது பக்க பாடி கவரில் கீறலும், இடது பக்க பாதுகாப்பு உறையில் கீறலும் ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதன் மூலம் மேற்படி சிறிய ரக சரக்கு வாகனம் அதிவேகமாக செல்லவில்லை என்பது வெளிப்படுகிறது. அரசு தரப்பு வழக்கு போல் மேற்படி இலகு ரக சரக்கு வாகனம் அதிவேகமாக சென்று இருந்தால் மேற்படி இரு வாகனங்களிலும் பெரிய அளவில் சேதாரம் ஏற்பட்டிருக்கும். இறந்து போன தனசேகரின் தாய், மனைவி மற்றும் மகனான அசா.1 முதல் அசா.3 ன் சாட்சியத்தை வைத்து மட்டும் அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டதாக தீர்மானிக்க முடியாது.

25) எதிரியை குற்ற சம்பவத்துடன் தொடர்புபடுத்தும் வகையில் நம்பத்தகுந்த தகுதியான நடுநிலையான எந்த சாட்சியங்களும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. அரசு தரப்பு வழக்கு உண்மையாக இருந்திருந்தால் எதிரிக்கு எதிராக நம்பத்தகுந்த தகுதியான நடுநிலையான சாட்சிகள் சாட்சியம் அளித்திருப்பார்கள். மேலும் எதிரி மேற்படி சரக்கு

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:25:41 +0530

வாகனத்தை ஓட்டியதாக அசா.1 மற்றும் அசா.5 ஆகியோர் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

26) மேலும் இருசக்கர வாகனம் ஓட்டிய இறந்து போன நபருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்று அசா.10 தனது குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்துள்ள நிலையில், இறந்து போன நபர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பார்வையிடும் போது மேற்படி ஆய்வறிக்கையில் இறந்து போன நபருக்கான ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளதன் மூலம் இறந்து போன நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது வெளிப்படுகிறது. எனவே இறந்து போன நபர் வாகனம் ஓட்டுவதற்கு தகுதியான நபர் இல்லை என்பதும் வெளிப்படுகிறது.

27) அசா.1, அசா.2, அசா.3, அசா.5 மற்றும் அசா.7 ஆகியோர்களின் சாட்சியத்தை பார்வையிடும் போது எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை இயக்கியதாக வெளிப்படவில்லை. அரசு தரப்பு வழக்கு போல் எதிரி உண்மையில் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டிருந்தால் எந்தவித முரண்பாடுகள் இன்றி அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியமளித்திருப்பார்கள். அரசு தரப்பு சாட்சிகள் முரண்பாடாக சாட்சியமளித்துள்ளதால் அரசு தரப்பு வழக்கு மீது நம்பிக்கை ஏற்படவில்லை.

28) முடிவில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 279, 337 மற்றும் 304(A) கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி அல்ல என குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் தீர்மானித்து, மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

29) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் இல்லாததால் அது குறித்த உத்தரவில்லை.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:25:46 +0530

30) இவ்வழக்கில் எதிரி இந்நீதிமன்றத்தில் எழுதிக்கொடுத்துள்ள பிணைமுறிகளில் குவிமுச பிரிவு 437–A–ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறிகள் தவிர மற்றவை ரத்து செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. எதிரி குவிமுச பிரிவு 437–A ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறியானது 6 மாதங்கள் கழித்து தானாக இரத்தாகும் எனவும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்து தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் வருடம் ஜீலை திங்கள் 21 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.21 18:25:53 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| அரசு தரப்பு சாட்சிகள் எண் | சாட்சிகளின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1. | திருமதி. கமலம் | சம்பவம் மற்றும் காயம்பட்ட சாட்சி |
| 2. | திருமதி. முருகலட்சுமி | கேள்விப்பட்ட மற்றும் பிரேத விசாரணை சாட்சி |
| 3. | திரு. கிஷோர்செல்வம் | கேள்விப்பட்ட மற்றும் பிரேத விசாரணை சாட்சி |
| 4. | திரு. அமுல்ராஜ் | பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபட சாட்சி |
| 5. | திரு. செந்தில்குமார் | கண்ணுற்ற சாட்சி |
| 6. | திரு. ஜான் (முதல்நிலைக் காவலர், நாலாட்டின்புதூர் காவல் நிலையம்) | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சாட்சி |

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.21 18:25:59 +0530

| | | |
|---|---|---|
| 7. | திரு. கண்ணன் | கண்ணுற்ற சாட்சி |
| 8. | திரு. செல்லப்பாண்டி | பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபட சாட்சி |
| 9. | திரு. சிலுவை அந்தோணி (உதவி ஆய்வாளர், நாலாட்டின்புதூர் காவல் நிலையம்) | முதல் புலன்விசாரணை சாட்சி |
| 10. | திருமதி. சுகாதேவி (ஆய்வாளர், நாலாட்டின்புதூர் காவல் நிலையம்) | மேல் புலன்விசாரணை சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் | ஆவணத்தின் நிலை |
|---|---|---|---|
| 1. | புகார் வாக்குமூலம் – 10.09.2020 | அ.சா.1 – 11.07.2022 | அசல் |
| 2 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அசா.2 ன் அறிவேன் சாட்சி கையொப்பம் மட்டும் – 10.09.2020 | அ.சா.2 – 11.07.2022 | அசல் |
| 3 | பார்வை மகஜரில் உள்ள அசா.4 ன் இரண்டாவது கையொப்பம் மட்டும் – 10.09.2020 | அ.சா.4 – 18.07.2022 | அசல் |
| 4 | முதல் தகவல் அறிக்கை – 10.09.2020 | அ.சா.6 – 08.08.2022 | அசல் |
| 5 | பார்வை மகஜர் – 10.09.2020 | அ.சா.8 – 07.07.2023 | அசல் |
| 6 | மாதிரி வரைபடம் – 10.09.2020 | அ.சா.9 – 20.12.2024 | அசல் |
| 7 | சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை – 11.09.2020 | அ.சா.9 – 20.12.2024 | அசல் |

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:26:04 +0530

| | | | |
|---|---|---|---|
| 8 | பிரேத விசாரணை அறிக்கை – 11.09.2020 | அ.சா.10 – 08.07.2026 | அசல் |
| 9 | பிரேத பரிசோதனை அறிக்கை – 11.09.2020 | அ.சா.10 – 08.07.2026 | அசல் |
| 10 | அசா.1ன் காயச்சான்று – 25.01.2021 | அ.சா.10 – 08.07.2026 | அசல் |
| 11 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 67 BH 7455) – 16.09.2020 | அ.சா.10 – 08.07.2026 | அசல் |
| 12 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 69 AQ 9182) – 01.10.2020 | அ.சா.10 – 08.07.2026 | அசல் |
| 13 | அசா.1ன் காயத்தகவல் – 10.09.2020 | அ.சா.10 – 08.07.2026 | அசல் |
| 14 | இறந்து போன தனசேகரின் காயத்தகவல் | அ.சா.10 – 08.07.2026 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்–** இல்லை

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.21 18:26:11 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி